இந்திய பாரம்பரியம் டிஜிட்டல் பாதுகாப்பிலா? ஆவணக் காப்பகங்கள் முழுமையாக டிஜிட்டல் மயமாகுமா?

# டிஜிட்டல் மயமாக்கல் பணிகள் எந்த நிலையில் உள்ளன?

## மாநிலங்களவையில் - கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி!

நாமக்கல், ஜூலை 25 -

டெல்லியில் நடைபெற்ற மாநிலங்களவை கூட்டத்தொடரில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டார். அப்போது அவர் அருங்காட்சியகங்கள் மற்றும் ஆவணக் காப்பகங்கள் டிஜிட்டல் மயமாக்கப்படுகிறதா? கையெழுத்துப் பிரதிகள் மற்றும் தேசிய ஆவணக் காப்பகங்களை டிஜிட்டல் மயமாக்குவது தொடர்பாக என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன? என கேள்வி எழுப்பியுள்ளார்



இதற்கு பதில் அளித்து பேசிய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஸ்ரீ கஜேந்திர சிங் ஷேகாவத், சிடாக் (புனே) தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்ட JATAN மென்பொருள் மூலம் மத்திய பண்பாட்டு அமைச்சகம் அருங்காட்சியகப் பொருட்கள் மற்றும் ஆவணக் காப்பகங்களை டிஜிட்டல் மயமாக்கி வருகிறது. Museums of India இணையதளத்தில் 8 தேசிய அருங்காட்சியகங்கள், 2 தொல்லியல் துறை அருங்காட்சியகங்கள் மற்றும் புனே டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் அருங்காட்சியகத்தின் டிஜிட்டல் தொகுப்புகள் இடம்பெற்றுள்ளன.

15.07.2026 நிலவரப்படி, மொத்தம் 4,88,983 அருங்காட்சியகப் பொருட்களில் 3,75,707 பொருட்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டு இணையத்தில் பொதுமக்கள் பார்வைக்காக பதிவேற்றப்பட்டுள்ளன. மேலும், அருங்காட்சியக மானியத் திட்டத்தின் கீழ் கடந்த மூன்று நிதியாண்டுகளில் டிஜிட்டல் மயமாக்கலுக்காக ரூ.25 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் கையெழுத்துப் பாரம்பரியத்தைப் பாதுகாத்து, நாகரிக அறிவு மரபை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் நோக்கில் மத்திய பண்பாட்டு அமைச்சகம் ஞான் பாரதம் (Gyan Bharatam Mission) திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதன் கீழ் தற்போது 3.5 லட்சத்திற்கும் மேற்பட்ட டிஜிட்டல் கையெழுத்துப் பிரதிகள் பொதுமக்கள் பார்வைக்காக இணையத்தில் கிடைக்கின்றன.

மேலும், தேசிய ஆவணக் காப்பகம் (National Archives of India) மதிப்புமிக்க ஆவணப் பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் நோக்கில் 30 கோடி பக்கங்களை டிஜிட்டல் மயமாக்கவும், 4.5 கோடி பக்கங்களை பாதுகாக்கவும் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. 21.07.2026 நிலவரப்படி சுமார் 17.67 கோடி டிஜிட்டல் படங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள், ஆய்வாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் உலகின் எந்தப் பகுதியிலிருந்தும் இந்தியாவின் ஆவணப் பாரம்பரியத்தை அணுகும் வகையில், டிஜிட்டல் ஆவணங்கள் 'Abhilekh Patal' இணையதளத்தில் பதிவேற்றப்பட்டு, டிஜிட்டல் களஞ்சியங்கள் மற்றும் தேடக்கூடிய தரவுத்தளங்கள் மூலம் அணுகல் மேலும் மேம்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.



திருவண்ணாமலை மாநகர தி.மு.க. சார்பில் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, மாணவர்களுக்கு மாநகர மேயர் நிர்மலாவேல்மாறன் நோட்டுப் புத்தகங்கள் வழங்கினார். உடன் ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், க.சௌந்தரராசன், சு.ராஜாங்கம், ஏ.ஏ.ஆறுமுகம், காலேஜ் கு.ரவி, சி.சண்முகம், ந.சீனுவாசன், அ.கோவிந்தன், இல.குணசேகரன், கு.கணேஷ், மண்டி பிரகாஷ் உட்பட பலர் உள்ளனர்.

மேற்கு ஆசிய மோதலால்

# எல்.பி.ஜி. (LPG) விநியோகம் - விலையில் ஏற்படும் தாக்கம் என்ன?

## மக்களவையில் - கே.ஈஸ்வரசாமி கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 25 –

பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் பின் வரும் கேள்விகளுக்கு விடையளிப்பாரா என மக்களவையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப் பினர் கே.ஈஸ்வரசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

அவர் எழுப்பியுள்ள கேள்வி வருமாறு:

மேற்கு ஆசியாவில் நடைபெற்று வரும் மோதலால், நாட்டின் திரவ மாக்கப்பட்ட பெட்ரோலிய எரிவாயு (LPG) இறக்குமதியில்அதாவது கப்பல் போக்குவரத்துப் பாதைகளில் ஏற்படும் இடையூறுகள், சரக்குக் கட்டணங்கள் மற்றும் விநியோகச் சங்கிலிகள் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள தாக்கத்தை அரசு மதிப்பீடு செய்துள்ளதா?, ஆம் எனில் அதன் விவரங்கள் என்ன?



பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா (PMUY) திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானிய விலையிலான எல்பிஜி சிலிண்டர்களின் எண்ணிக்கையை அரசு குறைந்துள்ளதா? ஆம் எனில் அதற்கான காரணங்கள் மற்றும் நியாயங்கள் என்ன?

இந்த மோதலால் சர்வதேச எல்பிஜி விலைகள், சரக்குக் கட்டணங்கள் மற்றும் காப்பீட்டுச் செலவுகள் எந்த அளவிற்கு அதிகரித்துள்ளன மற்றும் உள்நாட்டு எல்பிஜி விலைகளில் இது ஏற்படுத்தக்கூடிய தாக்கம் என்ன?

நாடு முழுவதும் எல்பிஜி தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய, அதாவது மூலோபாய இருப்புக்களைப் பராமரித்தல், இறக்குமதி மூலங்களை பல்வகைப்படுத்துதல் மற்றும் விநியோகக் கட்டமைப்பை வலுப்படுத்துதல் உள்ளிட்ட அரசு எடுத்துள்ள அல்லது முன்மொழிந் துள்ள நடவடிக்கைகள் என்ன?

சுற்றுலாத் துறை அமைச்சர் பின்வருவனவற்றைத் தெரிவிப்பாரா?

தமிழ்நாட்டின் பொள்ளாச்சி சேத்துமடை பகுதி மற்றும் உத்தரப்பிரதேசத்தின் (குறிப்பாக புந்தேல்கண்ட் பகுதி) இயற்கை விவசாயம் சார்ந்த மற்றும் வேளாண் சுற்றுச்சூழல் சுற்றுலா (agroeco tourism) ஆகியவற்றின் சாத்தியக்கூறுகள் குறித்து அரசு ஏதேனும் ஆய்வு அல்லது மதிப்பீட்டை நடத்தியுள்ளதா அல்லது முன்மொழிந்துள்ளதா?

இத்தகைய முயற்சி களுக்கு 'சுதேஷ் தர்ஷன் 2.0' (Swadesh Darshan 2.0), 'தேகோ அப்னா தேஷ்' (Dekho Apna Desh), கிராமப்புற சுற்றுலா முயற்சிகள் அல்லது பிற மத்தியத் துறைத் திட்டங்களின் கீழ் ஆதரவளிக்க முன்மொழி யப்பட்டுள்ளதா?, அவ்வாறெனில், அதுகுறித்த விவரங்கள் என்ன?

உள்கட்டமைப்பு, சாலை ஓர வசதிகள், விளக்க மையங்கள், டிஜிட்டல் விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்தல் ஆதரவு உள்ளிட்ட, குறிப்பிட்ட பகுதிகளில் இயற்கை விவசாயம் சார்ந்த சுற்றுலாச் சுற்றுகளை (tourism circuits) மேம்படுத்துவதற்கு அரசு நிதி ஒதுக்கியுள்ளதா அல்லது ஒதுக்க முன்மொ ழிந்துள்ளதா?

குறிப்பிட்ட பகுதிகளில் நிலையான வேளாண் சுற்றுச்சூழல் அமைப்புக்களை (agrotourism ecosystems) மேம்படுத்துவதில் விவசாயிகள், சுயஉதவிக் குழுக்கள் மற்றும் உள்ளூர் இளைஞர்களுக்கு ஆதரவளிக்க முன்மொழியப்பட்டுள்ள பயிற்சி திறன் மேம்பாடு, நிதி ஊக்கத் தொகைகள் அல்லது பொது தனியார் கூட்டாண்மை மாதிரிகள் குறித்த விவரங்கள் என்ன?

உள்துறை அமைச்சர் பின்வரு வனவற்றைத் தெரிவிப்பாரா?

கடந்த ஐந்து ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட இணையவழி குற்ற வழக்குகள், அத்துடன் அக்காலகட்டத்தில் நிகழ்ந்த இணையவழி மோசடிகள் மற்றும் இணையவழி சுரண்டல் சம்பவங்களின் விவரங்கள் (மாநிலம் மற்றும் ஆண்டு வாரியாக),

இணையவழி மோசடிகளால் குடிமக்கள் சந்தித்ததாக மதிப்பிடப்பட்ட நிதி இழப்புகள், மீட்கப்பட்ட அல்லது முடக்கப்பட்ட தொகை மற்றும் தீர்வு காணப்பட்ட புகார்களின் எண்ணிக்கை (மாநிலம் மற்றும் ஆண்டு வாரியாக),

திறன் மேம்பாடு, சிறப்பு இணையவழி காவல் நிலையங்கள், தடயவியல் ஆய்வகங்கள், புலனாய்வு அமைப்புகளுக்குப் பயிற்சி அளித்தல் மற்றும் மத்திய மாநில அரசுகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு ஆகியவற்றின் மூலம் இணையவழி குற்றங்கள் தொடர்பான புலனாய்வை வலுப்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள்,

பயனுள்ள கொள்கை உருவாக்கம் மற்றும் சட்ட அமலாக்கத்திற்காக, தேசிய இணையவழி குற்றத் தரவுகளின் காலத்திற்கேற்ற தன்மை மற்றும் கிடைக்கும் தன்மை குறித்து அரசாங்கம் ஆய்வு செய்துள்ளதா?, அவ்வாறெனில், நிகழ்நேர (realtime) அடிப்படையில் தகவல்களைப் பதிவு செய்தல் மற்றும் கண்காணிப்பதை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் உள்ளிட்ட அதன் விவரங்கள் என்ன? என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.


# தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் "தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக (வேலூர்) தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின்" (பதிவு எண் 820/NAT, பேரவை இணைப்பு எண். 405) பணிமனைகள் மற்றும் மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தலை நடத்திட பேரவைச் செயலாளர் திரு. **சோம.அழகிரி** அவர்கள் தேர்தல் ஆணையாளராக நியமனம் செய்யப்பட்டு ஏற்கெனவே பேரவையால் அறிவிப்பு செய்யப்பட்டது. அதன்படி தேர்தல் ஆணையாளரால் வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு கீழ்க்கண்ட தேர்தல் அட்டவணை, விதிமுறைகளின்படி தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

**தேர்தல் கால அட்டவணை**

**பணிமனை நிர்வாகிகள் தேர்தல்**

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் (பணிமனைகள் தோறும்) – 10.08.2026 காலை 11.30 மணி

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் (பணிமனைகள் தோறும்)– 14.08.2026 காலை 11.00 மணி

வேட்பு மனு படிவம் வழங்குதல் –16.08.2026 காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

வேட்பு மனு தாக்கல்–17.08.2026 காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை

வேட்புமனு பரிசீலனை–17.08.2026 மதியம் 2.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

தகுதியான வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல்–17.08.2026 மாலை 6.00 மணி

வேட்பு மனு திரும்பப் பெறுதல்–18.08.2026 காலை 12.00 மணி வரை

இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல்–18.08.2026 மாலை 4.00 மணி

போட்டியிருப்பின் வாக்குப் பதிவு (பணிமனைகள்தோறும்) – 23.08.2026 காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

**மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல்**

வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் –24.08.2026 காலை 9.00 மணி

(பணிமனைகளில் வெற்றி பெற்றவர்கள்)வேட்பு மனு படிவம் வழங்குதல் –24.08.2026 காலை 9.30 மணி

வேட்பு மனுத்தாக்கல்–24.08.2026 காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

வேட்பு மனு பரிசீலனை –24.08.2026 மதியம் 2.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை

தகுதியுள்ள வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல்–24.08.2026 மாலை 3.30 மணி

வேட்பு மனு திரும்பப் பெறுதல்–24.08.2026 மாலை 4.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை

இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல்–24.08.2026 மாலை 5.00 மணி

போட்டியிருப்பின் வாக்குப் பதிவு–25.08.2026 காலை 9.00 மணி முதல் காலை 11.00 மணி வரை

வாக்குப் பதிவு முடிந்தவுடன் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

**குறிப்பு:–**

1) பணிமனை தேர்தலுக்கு உரிய வேட்பு மனு படிவம் வழங்குதல், வேட்பு மனு தாக்கல், மனு பரிசீலனை, இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் வேலூர் மத்திய சங்க அலுவலகத்தில் நடைபெறும். வாக்குப் பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை முடிவுகள் அறிவித்தல் அந்தந்த பணிமனைகளில் ஒதுக்கப்படும் இடத்தில் நடைபெறும்.

2) மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் தொடர்பான அனைத்து நடைமுறைகளும் வேலூர் மத்திய சங்க அலுவலகத்தில் நடைபெறும்.

**24.07.2026** — **மு.சண்முகம்**, **Ex.MP**

இடம் : கலைஞரகம் — பொதுச்செயலாளர்,

தொ.மு.ச. பேரவை


மாணவர்களிடம் கற்றல் குறைபாடு - இடைநிற்றல் -

# பாடத் திட்டத்தில் சமச்சீரின்மையால் வேலைவாய்ப்புகள் பாதிக்கப்படுமா?

## மாநிலங்களவையில் - எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 25 -

மாநிலங்களவையில் கழக உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம் 22 ஜூலை 2026 அன்று மாநிலங்களவையில் மாணவர்களிடையே நிலவி வரும் கற்றல் குறைபாடு, இடைநிற்றல் பாடத்திட்டத்தில் சமச்சீர் இன்மை ஆகியவற்றால் எதிர்கால சந்ததியினரின் வேலை வாய்புகள் பாதிக்கப்படுவதை தடுக்க ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளதா? என்றும், அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் திறன் மேம்பாடு. தொழிற்கல்வி ஆகிய வற்றை பள்ளிக் கல்வியில் ஒருங்கிணைப்பதால், வேலை வாய்ப்புத் திறனை மேம்படுத்த இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் கல்வித் துறை இணையமைச்சர் ஜெயந்த் சௌத்ரி அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.



அதற்கு ஒன்றிய அரசின் கல்வித்துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:


அடிப்படை கல்வி, எழுத்தறிவு, திறன் மேம்பாடு ஆகியவற்றை மாணவர்களிடம் வளர்த்தெடுக்க தேவையான அனைத்து முயற்சிகளையும், தேசிய கல்வித் கொள்கை 2020ன் மூலமாக, ஒன்றிய அரசு எடுத்து வருகிறது என்றும், சமக்ரா சிக்ஷா, பிரதம மந்திரியின் போஷன் திட்டம், கஸ்துரிபா காந்தி குழந்தைகள் திட்டம் ஆகியவற்றின் மூலமாக பொருளாதாரத்தில் பின்தங்கிய குழந்தைகளின் மேம்பாடு, ஒன்றிய அரசால் உறுதி செய்யப்படுகிறது என்றும், பாரக் தேசிய ஆய்வு 2024 மூலம் கற்றல் குறைபாடு கண்டறியப்பட்டு தேவையான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், அடிப்படைக் கல்வி, எழுத்தறிவு, எண்களின் அறிவு திறன் மேம்பாடு ஆகியவற்றை மேம்படுத்த ஒன்றிய அரசின் திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன என்றும், கற்றல் குறைபாடு, இடைநிற்றல் ஆகியன தற்போது ஏழு சதவீதமாக குறைந்துள்ளது என்றும் இணையமச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

மேலும், இணைய வழிக் கல்வியின் மூலம் திக்ஷா. ஸ்வயம் பிரபா போன்ற திட்;டத்தின் வழியாக தொழிற்கல்வி, திறன் மேம்பாடு ஆகியன மாணவர்களிடையே பெருகி வருகிறது என்றும், பல்கலைகழக மானியக் குழுவின் உதவியுடனும் அனைத்திந்திய தொழிற்கல்வி குழுமத்தின் உதவியுடனும் பாடத்திட்டங்கள், நவீன மயமாக்கப் பட்டு வருகிறது என்றும், தேசிய வேலை பழகுநர் பயிற்சி நிறுவனுத்தின் மூலம் 17 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் கடந்த 5 ஆண்டுகளில் பயிற்சி பெற்றுள்ளனர் என்றும், உயர்கல்வி நிறுவ னங்களின் உதவியுடன் 457 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும், ஜன் சிக்ஷான் சன்ஸ்தான், பிரதம மந்திரி திறன் மேம்பாட்டுத் துறையினரால் செயல்படுத்தபடுகின்றன என்றும், ஒன்றிய அரசின் கல்வித் துறை இணையமைச்சர் ஜெயந்த் சௌத்ரி மாநிலங்களவையில் கழக உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மயிலை இரா. காசிச்சாமி

### ஜூலை 25 (1992)



தூத்துக்குடி மாவட்டத்தில் பிறந்த இவர் சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகியவற்றில் தீவிரமாய் பணியாற்றி, கழகம் துவக்க காலம் முதல் கழகப் பணியாற்றத் தொடங்கினார். 1952 முதல் சென்னை மாவட்டத்தில் கீழ்ப்பாக்கம் பகுதியிலும் பின்னர், மயிலை பகுதியில் தனது இறுதிநாள் வரை கழகப் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டத்திலும், ஈழத்தமிழர் பாதுகாப்பு போராட்டத்திலும் பங்கேற்று சிறை சென்றவர். மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

1968ஆம் ஆண்டு மயிலை பகுதி, 94வது வார்டு மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் தொடர்ந்து மயிலை வார்டு குழுத் தலைவராகவும் சிறப்பாக பணியாற்றி பொதுமக்களிடம் பாராட்டைப் பெற்றவர்.

இவர் பகுதிக் கழகப் பொறுப்பாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

தமிழ்நாடு வணிகர்களின் மத்தியில் கழக உணர்வை வளர்த்து அதனடிப்படையில், தமிழ்நாடு வர்த்தக கழக பொதுச்செயலாளர் பொறுப்பேற்று பணியாற்றியவர்.

தலைவர் கலைஞர் அவர்களால் "மயிலையில் கழகம் வளர்த்த சிங்கம்" என பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**